# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, THENI.

**M.C.O.P.No.154/2024**

Deposition of Witness : PW-1 (முதல் மனுதாரர்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | செல்வம். | Father's Name | : | |
| Village | : | | Taluk | : | |
| Caste | : | | Calling | : | |
| Religion | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act No.44 of 1969 of the day of 20.01.2026

---

சாட்சி இன்று அழைக்கப்பட்டு Ms.S.Shanthi (Examiner) அவர்களால் உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

முதல் விசாரணை– தொடங்கப்பட்ட நேரம் : 11.11 மு.ப

நான் இம்மனுவின் முதல் மனுதாரர். நான் இன்று நீதிமன்றத்தில் எனது எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவைகள் தான், அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது தான். நான் என் தரப்பில் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். அந்த ஆவணங்கள் **ம.சா.ஆ–1** முதல் **ம.சா.ஆ–12** வரை குறியீடு செய்யப்படுகிறது.

மனுப்படி தீர்ப்பாகுமாறு பிரார்த்திக்கிறேன்.

(ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3, ம.சா.ஆ.5 முதல் ம.சா.ஆ.12 ஆவணங்கள் அசல் மனுவில் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள், ம.சா.ஆ.4 ஆவணம் உரிமையியல் நடைமுறைச்சட்ட கட்டளை 7 விதி 14(3)ன் படியாக மனுதாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டு ஆவணம் குறியீடு செய்யப்பட்டது.)

1, 2 எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினர்.

SARAVANAKUMAR.G.N

Digitally signed by SARAVANAKUMAR.G.N
Date: 2026.01.20 15:08:07 +0530

**3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

விபத்து சம்பவத்தை நேரில் பார்க்காததால் விபத்து நடந்த விதம் பற்றியும் விபத்து யாருடையா கவனக்குறைவினால் எவ்வாறு நடைபெற்றது என்று நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் 2ம் எதிர்மனுதாரருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்ற குற்றச்சாட்டை சேர்த்துதான் நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.4 ஆவணம் பதியப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு பதியப்பட்டுள்ளதால் 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் உரிமம் இல்லாத 2ம் எதிர்மனுதாரரை விபத்து சமயத்தில் வாகனத்தை ஓட்ட அனுமதித்துள்ளது காப்பீடு விதிமீறல் ஆகும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேலும் விபத்தானது புதிய சட்டத்திருத்திற்கு பின் ஏற்பட்டுள்ளதால் சட்டத்திருத்தத்தின்படி விதிமீறல் இருப்பதால் இழப்பீடு தொகையினை 1ம் எதிர்மனுதாரர்தான் கொடுக்க கடமைப்பட்டவர் என்றும் 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் நானும் மற்ற மனுதாரர்களும் ஒரே குடும்பமாக வாழ்ந்து வந்ததற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் நானும் மற்ற மனுதாரர்களும் இறந்த எனது மனைவியின் வருமானத்தை நம்பி வாழ்ந்து வரவில்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் இறந்த நபர் அங்கன்வாடி ஊழியராக வேலை பார்த்ததற்கும் மாதம் ரூ.14,000/- வருமானம் ஈட்டி வந்ததாக சொல்வதற்கும் உரிய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.10 சம்பள இரசீது ஆவணத்தை உண்மையென நிரூபணம் செய்ய தகுந்த அதிகாரியை எனது தரப்பு சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேன் என்றால் உள்ளேன். விபத்தின்பொழுது எனது மனைவி தலைக்கவசம் அணியாமல் சென்றததால்தான் தலையில் காயம் ஏற்பட்டு இறந்துள்ளார் என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் நான் கோரியுள்ள இழப்பீடு எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் மற்றும் மனுதாரர்கள் கோரியுள்ள இழப்பீடு தொகை மிக அதிகப்படியானது என்றும் அதனை 3ம் எதிர்மனுதாரர் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. விபத்தானது எனது மகனின் கவனக்குறைவினால் ஏற்பட்டுள்ளதாலும் 2ம் எதிர்மனுதாரர் உரிய ஓட்டுநர் உரிமம் இல்லாமல் விபத்து சமயத்தில் வாகனத்தை

SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2026.01.20 15:08:13 +0530

இயக்கியதாலும் 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் : 11.20 மு.ப

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

SARAVANAKUMAR.G.N

Digitally signed by SARAVANAKUMAR.G.N
Date: 2026.01.20 15:08:18 +0530

Motor Accident Claims Tribunal
(Chief Judicial Magistrate Court)
Theni.
Date: 20.01.2026